**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்கள்.02/2025, 03/2025 மற்றும் 04/2025**

in

**அசல் வழக்கு எண்.264/2014**

1. ராஜம்மாள்
2. குணசேகரன் (இறந்தவர்)
3. கணேஷ்பாபு
4. பூமாரி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. மாரியம்மாள்
2. கலைவாணி (இறந்தவர்)
3. கலைச்செல்வி
4. கலைச்செல்வம்
5. மகேஸ்வரன் ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்
6. ரவிச்சந்திரன்
7. சதீஸ்குமார்
8. ராஜாத்தி ...6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ 6 முதல் 8 உத்தேச பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 20.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இரமேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு செய்தித்தாள் மூலமாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 06.01.2026 அன்று இந்நீதிமன்றத்தால்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.01.23 17:49:09 +0530

ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுக்கள் மற்றும் 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

மனுதாரர்களால் இம்மனுக்களானது காலவரையறைச் சட்டம் பிரிவு 5, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 9 மற்றும் கட்டளை 22 விதி 4 பிரிவு 151–ன் கீழ், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 13.07.2023 தேதியில் இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 756 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மற்றும் அபேட்மெண்டை ரத்து செய்து, 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்கள்.02/2025, 03/2025 மற்றும் 04/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், இவ்வழக்கின் மத்தியில் 2ம் பிரதிவாதி கலைவாணி என்பவர் கடந்த 13.07.2023 தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு, அவரின் கணவரான 6ம் எதிர்மனுதாரர் மகனான 7ம் எதிர்மனுதாரர், மகளான 8ம் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள் என்றும், இவ்வழக்கை வழக்கறிஞரை சந்தித்து அவ்வப்போது வழக்கைப் பற்றி விபரம் கேட்டுவந்ததாகவும், 1ம் மனுதாரருக்கு, 2ம் பிரதிவாதி இறந்துபோன காலகட்டத்தில் கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் வாந்திநோய் ஏற்பட்டு உடல் பாதிப்பினால் நடமாட முடியாத நிலையில் கைப்பக்குவமாக நாட்டு மருந்து சாப்பிட்டு சிகிச்சை எடுத்து வந்த காரணத்தினால், 2ம் பிரதிவாதி இறந்துபோன விவரம் உடனடியாக மனுதாரர்களுக்கு தெரியவில்லை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:49:16 +0530

என்றும், பிரதிவாதிகள் தரப்பில் 22.09.2025 ல் மெமோ தாக்கல் செய்து 13.07.2023 ல் 2 ம் பிரதிவாதி இறந்துவிட்ட விபரத்தை இந்நீதிமன்றத்தில் தெரிவித்தபின்னர் மனுதாரர்களுக்கு தெரியவந்தவுடன், இறந்துபோன 2 ம் பிரதிவாதியின் இறப்பு தேதி மற்றும் வாரிசுகளின் பெயர், வயது, முகவரி ஆகிய விபரங்களை சேகரித்து தனது வழக்கறிஞரிடம் உரிய காலத்தில் கூற இயலவில்லை என்றும், 1 ம் மனுதாரருக்கு ஏற்பட்ட நோய் குணமான பின்பு வழக்கறிஞரிடம் சந்தித்து விபரம் கூறியபோது தான், இறந்துபோன 2 ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை எடுப்பதில் 756 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்ட விபரம் 1 ம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்று ஏற்பட்டதில்லை என்றும், தன்னை அறியாமல் தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், இறந்துபோன 2 ம் பிரதிவாதிக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை 6 முதல் 8 பிரதிவாதிகளாக வழக்கில் கட்சி சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்திக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், ஆகையால், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 13.07.2023 தேதியில் இறந்துபோன 2 ம் பிரதிவாதிக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 756 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மற்றும் அபேட்மெண்டை ரத்து செய்து, 2 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) **<u>இ.ம.எண்.2/2025 ல் 1 வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி எதிருரை 03/2025 மற்றும் 04/2025-ல் 1, 3 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் சுருக்கம்:-</u>**

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கது அல்ல என்றும், 13.07.2023 ல் இறந்துபோன கலைவாணிக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்று மனுதாரர்கள் பிரஸ்தாபிப்பது பொய்யாகும் என்றும், 2 ம் பிரதிவாதியின் வாரிசு விபரங்களை காட்ட வாரிசு சான்றும், இறப்பு சான்றும் தாக்கல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:49:23 +0530

செய்யாத நிலையில் 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் வாரிசுகள் என்று பிரஸ்தாபித்து முகவரி விலாசம் கூறியுள்ளது தவறானதாகும் என்றும், ஏனெனில், 2ம் பிரதிவாதிக்கு அசல் வழக்கில் சமன் சார்பு செய்யப்பட்ட காலத்திலேயே நீதிமன்றத்திலிருந்து சென்ற சமன் கலைவாணி ஆவுடையாபுரம் முகவரியில் இல்லையென குறிப்பிடப்பட்டு திருப்பப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர் கலைவாணி ஆவுடையாபுரம் விலாசத்தில் குடியிருந்து இறந்துபோனதாகவும் அவருக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் வாரிசு என்றும், அவர்களும் ஆவுடையாபுரம் கிராமத்தில் குடியிருப்பதாக இம்மனுவில் முகவரி விலாசம் தெரிந்து மனு தாக்கல் செய்துள்ளது மோசடி நடவடிக்கை என்றும், ஏனெனில் 2ம் பிரதிவாதிக்கு அசல் வழக்கில் ஆவுடையாபுரம் முகவரியில் சமன் சார்பு செய்யவில்லை என்றும், எனவே தற்போது அதே விலாசங்களில் குடியிருந்து வராத சூழ்நிலையில் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் ஆவுடையாபுரம் என்று குடியிருப்பு விலாசம் தெரிவித்திருப்பது தவறானது என்றும், எனவே தவறான விலாசத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நடவடிக்கை Or 6 R 14A ன் படி சரியான முகவரியை மனுதாரர் தெரிவிக்கும்வரை மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டியதும், சரியான முகவரி விலாசம் தெரிவிக்காத பட்சம் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டியது அவசியமான ஒன்றாகும் என்றும், இவ்வழக்கில் மனுதாரர் 756 நாட்களாக 2ம் பிரதிவாதியின் இறப்பு தெரியவரவில்லை என்றும், இந்த மனுதாரர் அவ்வப்போது வழக்கறிஞரை சந்தித்து விபரம் கேட்டு வந்தனர் என்றும், இந்த மனுதாரர்களில் 1ம் மனுதாரர் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அதனால் 756 நாட்கள் முடங்கியிருந்தார் என்றும் கூறுவது மருத்துவ வியப்பு செய்தியாகும் என்றும், மேற்கண்ட சங்கதி இந்த மனுதாரர்கள் இவ்வழக்கில் உண்மையை மறைத்து வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இந்த மனுதாரர்கள் 1ம் மனுதாரரை தவிர்த்து 3, 4 மனுதாரர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்ற இளம் பருவ நபர்கள் ஆவார்கள் என்றும், அவர்களே இந்த வழக்கில் அவ்வப்போது நீதிமன்றம் மற்றும் வழக்கறிஞரை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:49:29 +0530

சந்தித்து வந்துள்ளனர் என்றும், இவ்வழக்கில் நீண்டகாலமாக முத்திரைத்தாள் குறைபாட்டிற்கு நடவடிக்கை எடுத்து வழக்கு நிலுவையில் வந்த நிலையில் தொடர்ந்து இவ்வழக்கில் வழக்கறிஞருடன் மனுதாரர்கள் தொடர்பில் இருந்தனர் என்றும், இந்த நபர்களுக்கு 2ம் பிரதிவாதி கலைவாணியும் 2ம் வாதி குணசேகரனும் இறந்துபோன விபரங்கள் நன்கு தெரியும் என்றும், இருந்தும் மனுதாரர்கள் அவர்களின் இறப்பு விபரங்களை நீதிமன்றத்திற்கு தெரிவித்து உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வந்த நிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட பின்னும் இந்நீதிமன்றத்திற்கு உறுதிக்கூற்று தயார் செய்து வந்த பின்பும் இந்நீதிமன்றத்திற்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இந்நீதிமன்றத்தில் 26.09.2025 அன்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படியார்கள் இறந்துபோன விபரம் குறித்து மெமோ தாக்கல் செய்த பின்பு தற்போது இந்த மனு நடவடிக்கையை எடுத்துள்ள நிலையில் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டு இருந்ததால் இந்த விபரம் தெரியவரவில்லை என அபிடவிட்டில் கூறி காலதாமதத்தை மன்னிக்கக் கோருவது முற்றிலும் மோசடியானதாகும் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன 2ம் வாதிக்கு உரிய வாரிசு சான்று தாக்கல் செய்யாமலேயே 10.10.2025ம் தேதியில் 2ம் வாதியின் மனைவி இறந்துவிட்டார் என்றும், அவருக்கு வாரிசு சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் எவ்வித அடிப்படை ஆதாரமின்றி 2ம் வாதியின் மனைவி இறப்பு சான்று தாக்கல் செய்யாமலும் 2ம் வாதியின் வாரிசு சான்று தாக்கல் செய்யாமலும் இம்மனு நடவடிக்கையிலும் வாரிசு சேர்க்க மனுதாரர்கள் முன்வரவில்லை என்றும், அதுபோல் 2ம் பிரதிவாதிக்கு உரிய வாரிசுகளை சான்றாவணங்களுடன் முழுமையாக இந்நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் 6 முதல் 8 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என பிரஸ்தாபித்திருப்பது மோசடி என்றும், இவ்வழக்கில் இறந்துபோன நபர்களின் அனைத்து வாரிசு விவரங்களும் தெரிவித்து கட்சி சேர்க்கப்படவில்லை என்றும், மனுதாரர்கள் 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகள் என்றும், அதுபோல் 2ம் வாதிக்கு வாரிசுகள் எவரும் இல்லை என்றும் கூறும் சங்கதிகளை பொய் என்று இந்த எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள் என்றும், இந்த மனுதாரர்கள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:49:36 +0530

வேண்டுமென்றே அசல் வழக்கில் கோரிய பரிகாரங்கள் முகாந்திரம் இல்லையென்ற காரணத்தினால் இவ்வழக்கினை காலம் கடத்த வேண்டுமென்ற உள்நோக்கில் வாரிசு விவரங்களையும், இறப்பையும் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், மனுதாரர்கள் மனு நடவடிக்கை உள்நோக்கம் கொண்டுள்ளது என்பதால்தான் இவ்வழக்கில் 2ம் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு அற்றுபோய்விட்டது என்றும், அற்றுபோன நபர்களுக்கு உரிய வாரிசு விவரசான்று இன்றி ரத்து செய்யக்கோருவது சட்டவழிகால் படி அங்கீகரிக்கப்படாத நடவடிக்கையாகும் என்றும், 7, 8 எதிர்மனுதாரர்கள் பெயர் ரதீஸ்குமார், ராசாத்தி என்பதாகும் என்றும், குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும் தவறான பெயர் கூறப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 1 மற்றும் 3 முதல் 5 எதிர் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுக்களானது மனுதாரர்களால், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 13.07.2023 தேதியில் இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 756 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மற்றும் அபேட்மெண்டை ரத்து செய்து, 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.01.23 17:49:42 +0530

செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கின் மத்தியில் 2ம் பிரதிவாதி கலைவாணி என்பவர் கடந்த 13.07.2023 தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு, அவரின் கணவரான 6ம் எதிர்மனுதாரர் மகனான 7ம் எதிர்மனுதாரர், மகளான 8ம் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்றும், இவ்வழக்கை வழக்கறிஞரை சந்தித்து அவ்வப்போது வழக்கைப் பற்றி விபரம் கேட்டுவந்ததாகவும், 1ம் மனுதாரருக்கு, 2ம் பிரதிவாதி இறந்துபோன காலகட்டத்தில் கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் வாந்திநோய் ஏற்பட்டு உடல் பாதிப்பினால் நடமாட முடியாத நிலையில் கைப்பக்குவமாக நாட்டு மருந்து சாப்பிட்டு சிகிச்சை எடுத்து வந்த காரணத்தினால், 2ம் பிரதிவாதி இறந்துபோன விவரம் உடனடியாக மனுதாரர்களுக்கு தெரியவில்லை என்றும், பிரதிவாதிகள் தரப்பில் 22.09.2025ல் மெமோ தாக்கல் செய்து 13.07.2023ல் 2ம் பிரதிவாதி இறந்துவிட்ட விபரத்தை இந்நீதிமன்றத்தில் தெரிவித்தபின்னர் மனுதாரர்களுக்கு தெரியவந்தவுடன், இறந்துபோன 2ம் பிரதிவாதியின் இறப்பு தேதி மற்றும் வாரிசுகளின் பெயர், வயது, முகவரி ஆகிய விபரங்களை சேகரித்து தனது வழக்கறிஞரிடம் உரிய காலத்தில் கூற இயலவில்லை என்றும், 1ம் மனுதாரருக்கு ஏற்பட்ட நோய் குணமான பின்பு வழக்கறிஞரிடம் சந்தித்து விபரம் கூறியபோது தான், இறந்துபோன 2ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை எடுப்பதில் 756 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்ட விபரம் 1ம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்று ஏற்பட்டதில்லை என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரர்களால் மனுக்களில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:49:49 +0530

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரர்களால் மனுக்களில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

8) மேலும், இம்மனுக்களுக்கு 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. 2 வது எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட தபால் அறிவிப்பு (Postal summon) சார்பு செய்யப்பட்டு (Served) 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இரமேஸ்வரன் அவர்களே 2 வது எதிர்மனுதாரருக்கு ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்துள்ளார்.

9) இந்நிலையில், காலம்சென்ற 2 வது எதிர்மனுதாரரின் வழக்குரை முகவரி தவறு என்றும், அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றும், 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் கூறுவது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

10) மேலும், 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் காலம்சென்ற 2 வது எதிர்மனுதாரருக்கு 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தவிர வேறு வாரிசுகள் உள்ளார்களா? என்ற விவரங்கள் எதிருரையில் தெரிவிக்கப்படவில்லை. மேலும், 7, 8 எதிர்மனுதாரர்களின் பெயர் தவறானது என்பதற்கான ஆவணங்களும் எதிருரையில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், உரிய சான்றாவணங்கள் இல்லாமல் 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணைகள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

11) மேலும், 2 வது வாதியின் இறப்பு குறித்து 13.10.2025 ல் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுவிட்டது. ஆகையால், காலம்சென்ற 2 வது வாதி குறித்து 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் கூறும் ஆட்சேபணைகள் இம்மனுக்களில் இந்நீதிமன்றத்தால்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:49:56 +0530

ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

12) மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**<u>13) இறுதியாக</u>**

**<u>இ.ம.எண்.02/2025</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 29.01.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.01.2026.

**<u>இ.ம.எண்.03/2025</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 29.01.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.01.2026.

**<u>இ.ம.எண்.04/2025</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:50:03 +0530

1 மற்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 29.01.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.01.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:50:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>** – இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:50:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.02/2025
I.A.No.03/2025 and
I.A.No.04/2025
in
O.S.No.264/2014
உத்தரவு (Draft / Fair)
நாள் : 23.01.2026